**செய்தி வெளியீடு எண் : 953** **நாள் : 12.06.2022**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை – 3 பணிகளை ஆய்வு செய்தார்**

இன்று (12.06.2022) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் வட சென்னை அனல் மின் திட்டம் நிலை–3 (1 x 800 மெகாவாட்) திட்டப் பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர் (திட்டம் ) திரு. ஆர்.எத்திராஜ், இயக்குநர் (உற்பத்தி) திரு. உ.ப. எழினி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின் திட்டம் நிலை–3 தொடர்பாக நடைபெற்று வரும்,

1. பிரதான இயந்திரங்கள் கொதிகலன், சுழலி, மின்னாக்கி மற்றும் கட்டுப்பாட்டு அறை.
2. நீர் குளிரூட்டும் கோபுரம்.
3. குளிர்ந்த நீர் கொண்டு செல்லும் பைப்கள் அமைக்கும் பணி.
4. 765 கிலோ வோல்ட் GIS துணை மின் நிலையம்.

ஆகிய கட்டுமான பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு விவரங்களைக் கேட்டறிந்தார்.

இதர பணிகளான குளிரூட்டும் கோபுரத்தின் எஞ்சிய பணிகள், குளிர் நீர் கொண்டு செல்லும் குழாய்களின் சீர் செய்யும் பணிகள் மற்றும் கொதிகலன் இரசாயன சுத்திகரிப்பு முடிந்தவுடன், கொதிகலன் எரியூட்டப்பட்டு சுழலிக்கு கொண்டு செல்லும் நீராவி குழாய்களைச் சுத்தம் செய்து சுழலி–மின்னாக்கி இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும், என்றும் மின் உற்பத்தியை மின் தொகுப்பில் இணைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு செல்லத் தேவையான

மின் கோபுரங்கள் அமைக்கும் பணி ஜூலை மாத இறுதிக்குள் முடிவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேரடி ஆய்விற்குப் பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். அதில் திட்டப் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆண்டுக்குள் பணிகள் நிறைவுற்று மின் உற்பத்தியை தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், திட்டத்தின் மற்ற இதர பணிகளான கரி கையாளும் அமைப்பு, சாம்பல் கையாளும் அமைப்பு, கடல்நீரை குடிநீராக்கும் அமைப்பு ஆகியவற்றை கூட்ட அரங்கில் விசாரணை மேற்கொண்டார், மேலும் அதிகரித்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு திட்டத்தை விரைந்து முடிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு வாரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

பின்னர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசுகையில்,

வட சென்னை அனல் மின் நிலைய நிலை 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010–ஆம் ஆண்டு 800 மெகாவாட் அளவிற்கு அனல் மின் நிலையத்தின் திட்டம் அறிவிக்கப்பட்டது. 2019–ஆம் ஆண்டு இத்திட்டப் பணிகள் முடிந்து உற்பத்தியைத் தொடங்கியிருக்க வேண்டும், இத்திட்டம் குறிப்பிட்ட காலத்தில் நிறைவு பெறவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் மிக விரைவாக இந்தப் பணிகளை முடித்து உற்பத்தி தொடங்க வேண்டும் என்று வாரியத்திற்கு உத்தரவிட்டார். அதன்படி, பணிகள் விரைவுபடுத்தப்பட்டு ரூ.8,723 கோடி மதிப்பிலான திட்டம் 83 விழுக்காடு பணிகள் இன்றுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளது. மீதம் இருக்கும் பணிகள் 6 மாத காலத்தில் முழுவதுமாக நிறைவு செய்து டிசம்பர் மாத இறுதிக்குள் வணிகரீதியாகத் தொடங்க பணிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழகத்தின் மின் தேவை என்பது 14,500 மெகாவாட் என்ற நிலை மாறி 16,500 மெகாவாட் அளவிற்கு தேவை அதிகரித்துள்ளது. அதற்கேற்ப நாம் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அது தொடர்பாக விநியோகத்திற்கான கட்டமைப்பையும் அடுத்த 5 ஆண்டுகளில் 6,220 மெகாவாட் அளவிற்கு

கூடுதலாக மின்சார வாரியத்தின் சொந்த உற்பத்தி நிறுவு திறன் இணைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் ஒரு நாளைக்கு 8,800 டன் நிலக்கரி தேவை என்ற நிலை இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் செய்யக்கூடிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த உற்பத்தி நிலையம் தற்கால தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின்சார உற்பத்தி செய்யக்கூடியது. பாய்லர் பணி மற்றும் ஒரு சில பணிகள் தான் நிலுவையில் உள்ளது. இது 6 மாதக் காலத்திற்குள் முடிவடைந்துவிடும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது திருக்கரங்களால் இத்திட்டத்தினை டிசம்பர் மாதம் தொடங்கிவைப்பார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலக்கரி தட்டுப்பாடு வருவதற்கு முன்பாகவே எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக டெண்டர் சர்வதேச அளவில் கோரப்பட்டு இறக்குமதிக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. வேறு மாநிலங்கள் அதிக விலை கொடுத்து நிலக்கரியை இறக்குமதி செய்கின்றபோது தமிழ்நாட்டில் மட்டும் குறைந்த விலையில் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு அதற்கான உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் தற்போது நிலக்கரி இருப்பு உள்ளது. இனி வரக்கூடிய காலங்களில் நிலக்கரி தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏப்ரல், மே மாதத்திற்காக குறுகிய காலத்திற்கான ஒப்பந்தம் போடப்பட்டு மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது போன்று மற்ற மாநிலங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவில்லை. என்று கூறினார்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in